இந்திய உச்சநீதிமன்றம்

பணியாளர்கள் அரசு காப்பீட்டுக் கழகம்

/எதிர்/

டெக்ஸ்மோ தொழில்நிறுவனம்

(சிறப்பு அனுமதி மனு எண்.811/2021)

மார்ச் 08, 2021

(மாண்புமிகு நீதியரசர்கள் திரு. இந்திரா பானர்ஜி

மற்றும் திரு. கிரிஷ்கேஷ் ராய்)

பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம், 1948 – பிரிவு 22 மற்றும் பிரிவு 24 – பணியாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின் கீழ் பிரிவு 2(22)ல் வரையறுக்கப்பட்டுள்ள ஊதியம் என்பதன் கீழ் ஒரு நிறுவனம் அவரது ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் போக்குவரத்து படி உள்ளடக்குமா? - தீர்வு: பிரிவு 2(22) ஊதியம் என்ற வரையறையில் இருந்து, ஊதியம் வேலைக்கான ஊதியத்தொகையை உள்ளடக்குகிறது, ஆனால், இழப்பீட்டுத்தொகையை உள்ளடக்காது - பயணப்படி பயணசலுகையையும், ஊதியம் - என்ற வரையறையில் இருந்து விலக்குகிறது - வேலையின் தன்மையை பொறுத்து ஒரு ஊழியருக்கு ஏற்படும் செலவினங்களை அவர் ஈடுகட்ட கொடுக்கப்படும் தொகையோ அல்லது அவர் திரும்ப பெரும் தொகையோ - போக்குவரத்துப்படி என்பது பயண படியின் தன்மையை போல்தான், அது ஊழியருக்கு அவரது வேலை செய்யும் இடத்தை வந்து சேர்வதற்கு மற்றும் அவர் வசிக்கும் இடத்திலிருந்து வேலை செய்யும் இடத்திற்கு வந்து சேர்வதற்கு உண்டான பயண தொகை - போக்குவரத்துப்படிக்கு பதிலாக பணி அமர்த்துபவர் இலவசமாக போக்குவரத்து வசதி செய்து கொடுக்கும் பட்சத்தில், அவர் வசிக்கும் இடத்திலிருந்து வேலை செய்யும்

இடத்திற்கு வந்து செல்வதற்கான செலவு ஊதியத்தின் ஒரு பகுதியாக இருக்காது - பணியாளர் அரசு காப்பீட்டு சட்டப்பிரிவு 2(22) பயணப்படியை ஊதியத்திலிருந்து தெளிவாக விலக்கி உள்ளது - பயணப்படி என்ற வார்த்தை பணியாளர் அரசு காப்பீட்டு சட்டத்தில் எந்த இடத்திலும் வரையறுக்கப்படவில்லை - பணியாளர் அரசு காப்பீட்டு பிரிவு 2(24) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படும் அனைத்து வார்த்தைகளும், தொடர்களும் பணியாளர் அரசு காப்பீட்டு சட்டப்பிரிவில் வரையறுக்கப்படாத பொழுது, தொழில் தகராறுகள் சட்டத்தில் உள்ள அர்த்தம் எடுத்துக்கொள்ள வேண்டும் - பயணப்படி என்ற வார்த்தை தொழில் தகராறுகள் சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை - பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் மற்றும் தொழில் தகராறு சட்டம் இரண்டிலும் எந்தவிதமான பிரிவுகளும் பயணப்படியின் நோக்கத்தை தடுக்கும்விதமாக இல்லை - அவ்வாறு வரையறை எதுவும் இல்லாத பட்சத்தில், பயணப்படியை பொதுவான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் - போக்குவரத்துப்படிக்கும், பயணப்படிக்கும் எந்தவித்தியாசமும் இல்லை என்ற வாதத்தை மனுதாரர் கழகம் போக்குவரத்துப்படி பயணப்படிக்குள் வராது என்று நியாயப்படுத்துகிறது - ஆனால், பயணப்படி போக்குவரத்துப்படியை உள்ளடக்கியது - பணியாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின் பிரிவு 2(22)(b) அனைத்து வகையான பயணப்படியையும், ஊதியம் என்ற வரையறையிலிருந்து விலக்குகிறது என்பதை காட்டுவதற்காகத்தான் - “எந்தவகையான பயணப்படி" என்ற வார்த்தையை உபயோகப்படுத்தியுள்ளது - போக்குவரத்துப்படி ஊதியம் என்ற வரையறையிலிருந்து ஏன் விளக்கப்படவில்லை என்பதற்கு எந்த காரணமும் இல்லை - தொழில் தகராறுகள் சட்டம் 1947.

வார்த்தைகள் மற்றும் தொடர்கள் - “போக்குவரத்து" மற்றும் "பயணம்" - அர்த்தம்.

சட்டவிளக்கம் - கட்டமைப்பின் விதிமுறை - பார்க்கும்பொழுது தெளிவில்லாமை - முடிவாக ஒரு சட்டப்பிரிவு தெளிவில்லாமல் இருக்கும் பட்சத்தில் அந்த சட்டம் எந்த காரணத்திற்காக எந்த பயனுக்காக இயற்றப்பட்டது என்பதை தான் நீதிமன்றம் அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மண்டல இயக்குனர், பணியாளர்கள் அரசு காப்பீட்டு கழகம் -எதிர்- ஐ.டி. சொலுஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், ஐ.எல்.ஆர். 2002 கே.எ.ஆர். 4019 – மறுதளிக்கப்பட்டது.

வெல்மேன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் எதிர் பணியாளர் அரசு காப்பீட்டு கார்பொரேஷன் (1999) 1 எஸ்.சி.சி 219: (1993) 3 சப்லி எஸ்.சி.ஆர் 568; மொடேல்ல வுளென்ஸ் லிமிடெட் எதிர் பணியாளர் அரசு காப்பீட்டு கார்பொரேஷன் (1994) சப்லி 3 எஸ்.சி.சி. 580; மற்றும் கார்பொரேஷன் (1994) சப்லி 3 எஸ்.சி.சி. 580 எதிர் மண்டல இயக்குனர், பணியாளர் அரசு காப்பீட்டு கார்பொரேஷன் (1994)4 எஸ்.சி.சி 7 – வேறுபடுகிறது.

மேனேஜ்மென்ட் ஆப் ஒரியண்டல் ஹோட்டல் லிமிடெட்., சென்னை எதிர் தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம், சென்னை 2002(1) LLJ 14; மண்டல இயக்குனர், பணியாளர் அரசு காப்பீட்டு நிறுவனம் எதிர் சுந்தரம் கிளைடோன் லிமிடெட்., 2004(II) LLJ30 மற்றும் மண்டல இயக்குனர், பணியாளர் அரசு காப்பீட்டு நிறுவனம், திரிசூர் எதிர் ராயல் பிளாஸ்டிக் தொழிற்சாலை, ஆலுவா 2015(2) KLT 64 – உறுதிசெய்யப்படுகிறது.

வேல்பூல் ஆப் இந்தியா லிமிடெட் -எதிர்- பணியாளர் அரசு காப்பீட்டு நிறுவனம் (2000) 3 எஸ்.சி.சி 185; (2000) 2 எஸ்.சி.ஆர். 165 – பார்வை.

அட்சுபோர்ட் லீர்நேர்ஸ் டிக்ஷனரி, 8-ஆவது பதிப்பு – பார்வை.

<u>பார்வையிடப்பட்ட வழக்குகள்</u>

(2000) 2 எஸ்.சி.ஆர். 165	பார்வை	பாரா 28
(1993) 3 சப்லி எஸ்.சி.ஆர்.568	பார்வை	பாரா 29
(1994) சப்லி (3) எஸ்.சி.சி 580	வேறுபடுகிறது	பாரா 29
(1994) 4 எஸ்.சி.சி 7	வேறுபடுகிறது	பாரா 29

உரிமையியல் மேல்முறையீட்டு ஆள்வரை, சிறப்பு அனுமதி மனு (C) .811 of 2021.

உரிமையியல் சீராய்வு மேல்முறையீடு எண்.1527 of 2020-ல் சென்னை உயர்நீதிமன்ற 08.10.2020-ம் தேதியிட்ட உத்தரவு மற்றும் தீர்ப்பிலிருந்து.

மேல்முறையீட்டாளர்களின் வழக்கறிஞர்கள் முனைவர். சுமந்த் பரத்வாஜ், Ms, மிருதுளா ராய் பரத்வாஜ்.

இந்த நீதிமன்றம் வழங்கிய உத்தரவு

<u>உத்தரவு</u>

1) கடந்த 31.07.2020 ம் தேதியன்று பணியாளர்கள்அரசு காப்பீட்டு நீதிமன்றம், கோயம்புத்தூர், பணியாளர் அரசு காப்பீட்டு அசல் மனு No. 1/16 ல் இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தால் பிரிவு 5 பணியாளர்கள் அரசு காப்பீட்டு சட்டம் 1948 ன்கீழ் தாக்கல் செய்த மனுவை அனுமதித்ததை உறுதிசெய்தும், அதற்கு உரிமையியல் சீராய்வு மேல்முறையீடு எண்.1527 ல் இந்த மனுதாரர்கள் நிறுவனம் பிரிவு 82(2) பணியாளர்கள் அரசு காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு மற்றும் தீர்ப்பிற்கு எதிராக இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்த எதிர்மனுதாரர் நிறுவனம் பல்வேறு வகையான விவசாய பம்புகள் மற்றும் பிற பொருட்களை தயாரித்து வருகிறது என்றும், கோயம்புத்தூரில் 10 கிளைகள் உள்ளது. பணியாளர்கள் அரசு காப்பீட்டுச் சட்டம், இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தினுடைய தொழிற்சாலை மற்றும் நிறுவனங்களுக்கு பொருந்தும். இந்த நிறுவனத்தின் தொழிலாளர்கள் அனைவரும் அந்த சட்டத்தில் சொல்லப்பட்ட வகையில் காப்பீடு செய்யப்பட வேண்டும்.

3) இந்த எதிர்மனுதாரர் நிறுவனம் பிரிவு 39 பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் ல் சொல்லியுள்ளவாறு, ஊழியர்களுக்கு தகுந்தாற்போல் பணியாளர்கள் அரசு காப்பீட்டில், அவர்களது பங்கையும் செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளது. பிரிவு 44 பணியாளர் அரசு காப்பீட்டு சட்டத்தில் மேற்படி நிறுவனம் அதற்காக பதிவேடுகளையும், தொழிலாளர்களின் விபரங்களையும் சரிவர பராமரிக்க வேண்டும். மேலும், பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம்

சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின்படி இந்த மனுதாரர் கார்ப்பரேஷனிடம் அதற்கு விபர அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

4) 23.01.2015 ம் தேதி அன்றோ அல்லது அதற்கு மேலோ இந்த மனுதாரர் கழக அதிகாரிகள் எதிர்மனுதாரர் நிறுவனத்தினுடைய பதிவேடுகளை ஆய்வு செய்தபோது டிசம்பர் 10 முதல் 14 வரையிலான காலத்திற்கு ஊதியத்தில் முரண்பாடு உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டு மேலும், அதன் விளைவாக குறைவான ஊதியம் மட்டுமே, எதிர்மனுதாரர் நிறுவனத்தால் பணியாளர்கள் காப்பீட்டு பங்குத்தொகையாக ரூ.21,52,829/- மட்டுமே இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தால் தொழிலாளர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. அதில் ரூ.9,48,517/- மட்டுமே பயணப்படி செலுத்தப்பட்டுள்ளது.

5) 19.03.2015-ம் தேதியிட்ட உத்தரவின் மூலம், இந்த மனுதாரர் கழகம் எதிர்மனுதாரர் நிறுவனத்தை அழைத்து நிலுவையில் உள்ள பங்களிப்பு தொகையான மொத்தம் ரூ.21,52,829/- மற்றும் அதற்கான வட்டித் தொகையான இந்த உத்தரவு தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறினால் நில வருவாய் தொகை நிலுவையிலிருந்து வசூலிக்கப்படும் என்றும் சொல்லியுள்ளது. கழகம் சொல்லும் தொகையில் மறுப்பதாகவோ அல்லது மாறுபாடு இருந்தாலோ நேரடி விசாரணைக்கும், எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

6) இருந்தபோதிலும், எதிர்மனுதாரர் நிறுவனம் மேற்படி தொகைக்கு எதிராக கழகம் தவறுதலாக பயணப்படி மற்றும் விடுப்பு சம்பளம் ஆகியவற்றை சேர்த்து தவறுதலாக ஊதியத்தை கணக்கீடு செய்துள்ளது. ஆனால், பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் பிரிவு 2(22) ன்படி ஊதியம் என்பதற்குள் மேற்படி தொகைகள் வராது.

7) அதன் பின்னிட்டு இந்த மனுதாரர் கழகம், 06.07.2016 ம் தேதி, பிரிவு 45(a) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின் படி ஒரு திருத்தப்பட்ட உத்தரவில், பங்களிப்பு தொகையில் ஏற்படும் வேறுபாட்டை கண்டறிந்து ரூ.19,38,300/- இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தால் கொடுக்கப்பட வேண்டும் என்றும், அதில் ரூ.9,89,783/- ஊதியத்தில் ஏற்பட்ட வேறுபாடு என்றும், ரூ.9,48,517/- பயணப்படியில் ஏற்பட்ட வேறுபாடு என்றும் சொன்னது. எதிர்மனுதாரர் நிறுவனம் ஊதியத்தில் உள்ள வேறுபாட்டு தொகையான ரூ.9,89,783/- மட்டும் செலுத்திவிட்டது.

8) மனுதாரர் கழகத்தால் கோரப்பட்ட தொகையான பயணப்படி வேறுபாட்டு தொகையான ரூ.9,48,517/- ஐ பொறுத்து பணியாளர்கள் அரசு காப்பீட்டு நீதிமன்றத்தின் முன்பாக எதிர்மனுதாரர் நிறுவனம் பணியாளர் அரசு காப்பீட்டு அசல் மனு No. 1/16 ல் வழக்கு தாக்கல் செய்தது.

9) அதில் மேற்படி நீதிமன்றம் 31.07.2020 ம் தேதியன்று இந்த எதிர்மனுதாரர் நிறுவனம் அவர்களது ஊழியர்களுக்கு கொடுத்த பயணப்படியை பொறுத்து மனுதாரர் கழகம் கோரிய ரூ.9,48,517/- ஐ ரத்து செய்து உத்தரவு பிறப்பித்தது. 3107.2016 ல் பணியாளர் அரசு காப்பீட்டு நீதிமன்ற உத்தரவில் பாதிக்கப்பட்ட இந்த மனுதாரர் கழகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரிவு 82(2) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டை தாக்கல் செய்தது. அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து இந்த சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்யப்பட்டது.

10) இந்த மனுவில் அடங்கியுள்ள சிறு கேள்வி யாதெனில்,

பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் பிரிவு 2(22) ல் வரையறுக்கப்பட்ட ஊதியம் என்பது எதிர்மனுதாரர் நிறுவனத்தால் அவர்களது ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயணப்படியையும் உள்ளடக்குமா என்பதே ஆகும்.

12) பிரிவு 2(22) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(2) வரையறைகள் - இந்த சட்டத்தில் எந்தவிதமான பொருளோ அல்லது சூழலோ இல்லாத நிலையில்

.....

(22) ஊதியம் என்பது பணமாக செலுத்தப்பட்ட அல்லது செலுத்த வேண்டிய அனைத்து ஊதியங்களையும் குறிக்கிறது. வேலை ஒப்பந்தத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் விதிமுறைகள் இருந்தால் அதை நிறைவேற்றியும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விடுப்பு, வேலை நிறுத்தம், சட்ட விரோதம் இல்லாத வேலை நிறுத்தம் அல்லது பணி நீக்கம் அதற்கான கட்டணத்தையும் உள்ளடக்கியது மற்றும் இரண்டு மாதத்திற்கு மிகாமல் இல்லாத இடைவெளியில் செலுத்தப்பட்ட இதர கூடுதல் ஊதியங்களையும், ஆனால், அது பின்வருவனவற்றை உள்ளடக்காது.

(a) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின்கீழ் எந்த ஒரு பணிக்கு அமர்த்துபவரும் ஓய்வூதியம் அல்லது வருங்கால வைப்புநிதி ஆகியவற்றிற்கு செலுத்திடும் பங்களிப்பு,

(b) ஏதேனும், பயணப்படி அல்லது பயணத்தின் சலுகைத்தொகை

(c) அவருடைய வேலையை பொறுத்து, வேலையின் இயல்பினால் ஏற்படும், அதில் ஏற்படும் செலவுகளை ஈடுகட்ட கொடுக்கப்படும் தொகை

(d) பணிநீக்கம் செய்யப்படும்பொழுது செலுத்தப்படும் பணிக்கொடை

13) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் பிரிவு 2(22)ஐ படித்துப் பார்க்கும்பொழுது, ஊதியம் என்பதற்கான பணியாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின்கீழ் எந்த ஒரு முதலாளியும் ஓய்வூதியம் அல்லது வருங்கால வைப்புநிதி ஆகியவற்றிற்கு செலுத்திடும் பங்களிப்பிற்கு, ஏதேனும், பயணப்படி அல்லது பயணத்தின் சலுகைத்தொகை, அவருடைய வேலையை பொறுத்து, வேலையின் இயல்பினால் ஏற்படும், அதில் ஏற்படும் செலவுகளை ஈடுகட்ட கொடுக்கப்படும் தொகை என்ற வரையறைக்குள் வராது.

14) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் பிரிவு 2(22)ல் சொல்லப்பட்ட வரையறையின்படி, ஊதியம் வேலைக்கான தொகைகள் மட்டுமே என்பது தெளிவாகிறது. மேலும், அது இழப்பீட்டு தொகைகளை உள்ளடக்காது என்பதும் தெரிய வருகிறது. பயணப்படி மற்றும் பயணச்சலுகை ஆகியவைகள் நேரடியாக ஊதியம் என்ற வரையறையிலிருந்து நேரடியாக விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், அவரது வேலை இயல்பின் ஏற்படக்கூடிய செலவுகளை ஈடுசெய்ய கொடுக்க வேண்டிய பணமும் விலக்களிக்கப்படாது.

15) பணியாளர் அரசு காப்பீட்டு நீதிமன்றம் முடிவு செய்தது, எங்கள் பார்வையில் போக்குவரத்துப்படி என்பது பயணப்படியை போன்றதுதான். மேலும், அது அவருடைய வேலை இடத்திற்கு வந்து சேர்வதற்கு உண்டான செலவுகளை ஈடு செய்வதற்கு கொடுக்கப்படுவது என்பதுதான் முக்கிய நோக்கமாக கொண்டு பணியாளர்களின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்துப்படி கொடுக்காமல் பணி அமர்த்துபவர்,

பணியாளர்களுக்கு கட்டணம் இல்லாத போக்குவரத்து வசதி செய்து தரும் பட்சத்தில், மேற்படி, அவரது இருப்பிடத்திலிருந்து வேலை இடத்திற்கு வருவதற்கு உண்டான போக்குவரத்து செலவுத்தொகைக்கு உண்டான பணமதிப்பு ஊதியம் என்பதன்கீழ் வராது என்று பணியாளர்கள் அரசு காப்பீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

16) ஓரியன்டல் ஹோட்டல் லிமிடெட் நிர்வாகம், சென்னை -எதிர்- பணியாளர்கள் அரசு காப்பீட்டுக் கழகம், சென்னை 2002(1) LLJ 14- என்ற வழக்கில் சென்னை உயர் நீதிமன்ற இரு அமர்வு, போக்குவரத்து படியை பொறுத்த வரை அது வேலை ஒப்பந்தத்தின் அடிப்படையில் சம்பளத்தின் ஒரு பகுதியாக எடுத்துக்கொண்டாலும், முழு தீர்வின்போது இந்த தொகை செலுத்தப்படுவது கூடுதல் தொகை என்ற வரம்பிற்குள்தான் வரும். இருப்பினும், மேற்படி தொகை வரையறையில் உள்ள குறிப்பிட்டு விலக்கப்பட்டுள்ள நிலையில், ஏதேனும் போக்குவரத்துப்படி, பயணப்படியாக கொடுக்கும் பட்சத்தில், அதன் நோக்கம் யாதெனில், பணியாளர் தனது பணியிடத்தை அடைவதற்கு மட்டும் பயணத்தின் போது செலவில் ஒரு பகுதியை ஈடு செய்வதற்கானதாகும். மேற்படி பயணப்படி கொடுப்பதற்கு பதிலாக முதலாளி ஊழியர்கள் அவர்களது இருப்பிடத்திலிருந்து வேலை செய்யும்நோக்கத்திற்கு வருவதற்கு இலவசமாக ஏற்பாடு செய்திருக்கும் பட்சத்தில் அதற்கான தொகையை ஊதியம் என்ற வரையறைக்குள் கொண்டு வர இயலாது என்றும், மேற்படி போக்குவரத்துப்படி, பயணப்படி பணமாக செலுத்தப்பட்டால் அது வேலை செய்யும் இடத்திலிருந்து வீட்டிற்கும் செல்வதற்கு உண்டானது. அதுவும் அதே தன்மையை கொண்டது தான். எனவே, ஏன் அதை 2(22) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம். -ன் கீழ் பயணப்படியாக கருத கூடாது என்ற கேள்வி காரணமற்றதாக உள்ளது.

17) மண்டல மேலாளர், பணியாளர் அரசு காப்பீட்டு கழகம் -எதிர்- சுந்தரம் கிளேட்டன் லிமிடெட். 2004(II) LLJ 30-ல் சென்னை உயர்நீதிமன்றத்தின் மற்றொரு அமர்வு மேற்படி வழக்கில் சொல்லியுள்ளது. பணியாளர் ஒருவர் இருப்பிடத்திலிருந்து வேலை செய்யும் இடத்திற்கு செல்வதற்கு போக்குவரத்து படிக்காக செலுத்தப்படும் தொகையை பயணப்படியாக கருத வேண்டும். மேலும், 2(22) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டப்பிரிவின்படி அது ஊதியம் என்பதற்குள் வராது என்று சொல்லியுள்ளது.

18) நாங்கள் சென்னை உயர்நீதிமன்றத்தின், ஓரியண்டல் ஹோட்டல் லிமிடெட், சென்னை மற்றும் சுந்தரம் கிளேட்டன் என்ற இரு வழக்குகளில் சொல்லியுள்ள கருத்தை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். மேலும், மண்டல இயக்குநர், இஎஸ்ஐ கார்ப்பரேஷன், திருச்சூர் எதிர் v. ராயல் பிளாஸ்டிக்ஸ் இண்டஸ்ட்ரீஸ், ஆலுவா 2015 (2) KLT 64, கேரள உயர்நீதிமன்ற ஒற்றை அமர்வு சென்னை உயர்நீதிமன்ற ஒரியண்டல் வழக்கை குறிப்பிட்டு மேற்படி பிரிவு 22 (a) முதல் (d) வரை பணியாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின் பிரிவு 2 ஊதியம் என்பதன் பெயரில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. ஒரு பயணப்படி அல்லது பணியாளர் சலுகையாக கொடுக்கப்படும் தொகை ஊதியம் என்பதிலிருந்தும், ஊதியம் என்ற தன்மையிலிருந்து விலக்கியுள்ளது. மேலும், வேலை ஒப்பந்தத்தின் அடிப்படையில், போக்குவரத்து படி மொத்தமாகவோ அல்லது இடைவெளிவிட்டு கொடுப்பதற்கு எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. மேலும், அது ஊதியத்துடன் சேர்த்து மொத்தமாக கொடுக்கப்பட்டது என்பதற்காக மட்டுமே பயணப்படி நிறுத்தப்படாது. மேற்படி கேரள உயர் நீதிமன்ற கருத்தை நாங்கள் ஏற்கிறோம்.

19) போக்குவரத்துப்படிக்காக கொடுக்கப்படும் தொகையை ஊதியம் என்பதிலிருந்து விலக்க முடியும் என்றும் ஏனென்றால் வீட்டு வாடகைப்படி கொடுக்கப்பட்டது போல் தான்

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஊழியருக்கும் போக்குவரத்துப்படி வேலை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. எனவே, சட்டப்படி அது நிலைக்கத்தக்கதாகும் என்று, மண்டல இயக்குனர், பணியாளர்கள் அரசு காப்பீட்டு கழகம் எதிர் MS IT (இந்தியா) பிரைவேட் லிமிடெட் ILR 2002 KAR என்ற வழக்கில் சொல்லியுள்ள கர்நாடக உயர்நீதிமன்ற கருத்தை நாங்கள் மறுக்கிறோம்.

20) எங்களது பார்வையில், போக்குவரத்துப்படி, ஊதியம் என்ற வரையறைக்குள் வராது என்பதற்கான காரணம் அது வீட்டு வாடகைப்படியை போல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஊழியருக்கும் வழங்கப்படுகிறது என்றும், அதை அவருக்கு போக்குவரத்துபடி சென்று வருவதற்காக உள்ளது என்று சொல்வதற்கான காரணம் பிரிவு 2(22) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் தவறாக வனையப்பட்டுள்ளதே ஆகும்.

21) பிரிவு 2(22) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் தெளிவாக பயணப்படியை ஊதியத்திலிருந்து விலக்கி உள்ளது. இது மனுதாரருக்கான கழகம் போக்குவரத்து படிக்கும், பயணப்படிக்கும் வித்தியாசம் உள்ளது என்றும் கர்நாடக உயர்நீதிமன்ற தீர்ப்பை வைத்துக்கொண்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது எங்கள் பார்வையில் தவறானது என்றும், போக்குவரத்துப்படி, பயணப்படியை போல் சமமான அளவில் கருதப்பட வேண்டும் என்பதற்கான சரியான காரணம் எதுவும் சொல்லப்படாத நிலையில் அது பயணப்படியில் இருந்து வேறுபட்டதாக தான் கருத வேண்டும்.

22) பயணப்படி என்பதற்கு பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் எந்தவிதமான வரையறையும் கொடுக்கவில்லை. பிரிவு 2(24) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் இந்த சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள வார்த்தைகளுக்கு இந்த சட்டத்தில் வரையறை

சொல்லப்படாமல் இருந்தால் அதற்கான அர்த்தம் தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் சொல்லப்பட்டுள்ளதை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த சட்டத்திலும், பயணப்படி பற்றி வரையறை சொல்லப்படவில்லை. பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் or தொழில் தகராறு சட்டம் இரண்டிலும் எந்தவிதமான எந்தவிதமான சட்டப்பிரிவும் பயணப்படியின் குறிக்கோளையும், நோக்கத்தையும் தடுக்கும் விதமாக இல்லை. அவ்வாறு பயணப்படி பொருத்து எந்தவிதமான வரையறையோ, விளக்கமோ இரண்டு சட்டத்திலும் சொல்லப்படாத நிலையில் அதற்கான பொதுவான அடிப்படையில் சாதாரணமான அர்த்தம் கொள்ள வேண்டும்.

23) போக்குவரத்துப்படி ஒவ்வொரு ஊழியருக்கும் கொடுக்கப்படலாம் அல்லது கொடுக்கப்படாமல் இருக்கலாம். அதை பொருத்து வீட்டு வாடகைப்படியும் ஊழியர்களுக்கு கொடுக்கப்படாமல் இருக்கலாம். மேற்படி படி தொகைகள் தொடர்ச்சியாகவோ, அல்லது அவ்வப்போது தேவைகளைப் பொறுத்து கொடுக்கப்படுவதோ இதற்கு பொருந்தாது. அது அந்தந்த படியின் தன்மையையும், தேவையையும் பொருத்தது.

24) வீட்டு வாடகைப்படி என்பதை போக்குவரத்துப்படியுடன் ஒப்பிட முடியாது. ஏனென்றால், வீட்டு வாடகைப்படி வேலை செய்யும் இடத்தையும், பணியாளரையும் எந்த இடத்திலும் தொடர்புப்படுத்தவில்லை. ஒரு ஊழியர் வேலை செய்கிறார் அல்லது இல்லை வேலையின் தன்மை அவருக்கு தொடர்புடையது இல்லை, அவருக்கு இருப்பிட வசதி தேவை.

25) போக்குவரத்துப்படி என்பது ஒரு ஊழியன் ஒரு வேலை செய்யும் இடத்திலிருந்து மற்றொரு வேலை செய்யும் இடத்திற்கு சென்று வருவதற்கான செலவை ஈடு

செய்யக்கூடியதாக உள்ளது. ஒரு பணி அமர்த்துபவர், தனது பணியாளர்கள் வேலை செய்யும் இடத்திற்கு அருகில் அவனுக்கான தங்கும் இடம் வசதி அளித்திருக்கும் பட்சத்தில் அவன் வேறு இடத்திற்கு சென்று வேலை செய்வது அல்லது வேலை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவனுக்கு ஏற்படும் செலவினங்கள் அவனுக்கு இருக்காது. அந்த மாதிரியான சூழ்நிலையில் போக்குவரத்துப்படி என்பது தேவையற்றது. மேலும், அது ஊதியத்தின் ஒரு பகுதியாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இந்த வழக்கில் மனுதாரர் கழகம் பணியாளர்கள் அவர்கள் வேலையை பொருத்தோ, அல்லது வேலை செய்யும் இடத்தை பொருத்தோ, இடத்திற்கு வருவதை பொருத்தோ ஏற்படும் செலவினங்களையும் பொருத்து அவருக்கு உருவாக்கவில்லை. அவ்வாறாக எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் போக்குவரத்துப்படி ஏன் ஊதியம் என்ற வரையறையில் வரவில்லை என்பதற்கான காரணம் தெரியவில்லை.

26) அட்சுபோர்ட் லேனெர்ஸ் அகராதி படி போக்குவரத்து என்பது ஒரு நபரை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டுசெல்வது. அதற்கான வாகனமோ அல்லது வேறுவிதமான போக்குவரத்தோ தேவைப்படுகிறது. மேலும், பயணம் என்பதற்கு ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு குறிப்பாக தொலைதூரத்தை குறிக்கிறது. அந்த தூரம் குறிப்பிட்ட சில கிலோ மீட்டர் தூரம் இருக்கலாம். ஒரு பணியாளர் 10 கி.மீ தூரம் பயணம் செய்து அவன் வேலை செய்யும் இடத்தை அடையலாம். ஆனால், பல்வேறு காரணங்களில் மக்கள் வேலை செய்யும் இடத்தை அடைவதற்கு பல மணிநேரம் பயணம் செய்கிறார்கள். பயணம் என்பது தொலைதூரம் மட்டும் அல்லது சிறிது தூரமும் அதன் வரையறைக்குள் வரும்.

27) பிரிவு 2(22) பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம்-ன் உடைய நோக்கத்தை பரிசீலிக்கும் போது, எப்போதாவது ஏற்படும் தொலைதூர பயணம் ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு செல்வதை மட்டுமே ஊதியம் என்பதிலிருந்து விலக்கியுள்ளது. பயணம் என்ற வார்த்தை ஒவ்வொரு முறையும் உபயோகப்படுத்தும் போது பயணம் தொடர்பாக பேருந்திலோ அல்லது ரயில் வண்டியிலோ அல்லது காரிலோ ஒரு இடத்திலிருந்து வீட்டிற்கும் அல்லது வேலை செய்யும் இடத்திற்கு செல்வதற்கானதாகும். மேலும், மேற்சொன்ன அகராதியில் சொல்லியுள்ள உதாரணம், " ஷி கம்யூட்ஸ் பிரேம் அட்சுபோர்ட் டு லண்டன் எவ்ரிடே" மற்றொரு உதாரணம் " பீப்பிள் ஆர் பபிரிப்பர்ட் டு கம்யுட் லாங் டிஸ்டன்ஸ் இப் தே ஆர் டெஸ்பிரைட் பார் ஒர்க்". ஆகவே, பணியாளர்கள் அரசு காப்பீட்டு நீதிமன்றம் போக்குவரத்துப்படிக்கும், பயணப்படிக்கும் வித்தியாசம் இல்லை என்று சரியாக சொல்லியுள்ளது.

28) வ்ஹிர்ல்பூல் ஆப் இந்தியா லிமிடெட் எதிர் பணியாளர் அரசு காப்பீட்டு கார்பொரேஷன் 2000(3) எஸ்.சி.சி 185 அந்த வழக்கில் இந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அதில் பணியாளர் அரசு காப்பீட்டு சட்டம் என்பது சமூகத்துவமான ஒரு சட்ட வடிவமைப்பு. அது பணியாளர்களின் நலனுக்காகவும், அவர்களது உடல்நல குறைவை பொறுத்தும், மகப்பேறு குறித்தும், வேலையினால் ஏற்படும் பாதிப்புகளை பொருத்தும் மற்ற சில சங்கதிகளை பொருத்து இயற்றப்பட்டது. சட்டத்தில் உள்ள பிரிவுகளில் எவ்விதமான முரண்பாடுகளும் இல்லாத நிலையில் நீதிமன்றம் பொதுவாக அந்த சட்டம் எதற்காக இயற்றப்பட்டதோ அதற்கு சாதகமாக தான் முடிவு செய்யப்பட வேண்டும். மேற்சொன்ன வழக்கில் ஊதியத்தின் வரையறையின் கீழ் வரும் என்று சொல்லியுள்ளது. இந்த வழக்கில் எந்தவிதமான முரண்பாடும் தெரியவில்லை. போக்குவரத்துப்படிக்கும், பயணப்படிக்கும் இடையே எவ்வித வேறுபாடும் இல்லை என்ற

மனுதாரர் கழக வாதத்தை நியாயப்படுத்துவதற்காக, மனுதாரர் கழகம் போக்குவரத்துப்படி என்பது பயணப்படிக்குள் வராது என்றும், பயணப்படி போக்குவரத்துப்படியும் உள்ளடக்கும் என்ற வாதம் முன்வைக்கிறது. பிரிவு 2(22)b ல் சொல்லப்பட்ட 'எந்தவொரு பயண படி' என்ற வார்த்தை எல்லாவிதமான பயணப்படியையும் ஊதியம் என்ற வரையறையில் இருந்து விலக்குகிறது.

29) வ்ஹிர்ல்பூல் ஆப் இந்தியா லிமிடெட் வழக்கில், இந்த நீதிமன்றம் மற்ற வழக்குகளான வெல்லமன் (இந்தியா) (பிரைவேட்) லிமிடெட் எதிர் பணியாளர் அரசு காப்பீட்டு கார்பொரேஷன் 1999(1) எஸ்.சி.சி 2019, மொடேல்லா உல்லன்ஸ் லிமிடெட் எதிர்பணியாளர் அரசு காப்பீட்டு கார்பொரேஷன் 1994(3) எஸ்.சி.சி 580 மற்றும் ஹரிஹர் போலிபைப்ரெஸ் எதிர் மண்டலா இயக்குனர், பணியாளர் அரசு காப்பீட்டு கார்பொரேஷன் 1994(4) எஸ்.சி.சி 7 ஆகியவற்றை ஆராய்ந்து சொல்லியுள்ளது. மேற்சொன்ன வெல்மேன் வழக்கில் இந்த நீதிமன்றம் ஊழியர்களுக்கு செட்டில்மெண்ட் போது கொடுக்கப்படும் மிகை ஊதியம் கொடுக்க வேண்டும் என்றும், ஆனால், ஊதியம் என்ற வரையறைக்குள் வராது என்று சொல்லியுள்ளது. மொடேல்லா உல்லன்ஸ் என்ற வழக்கில் தயாரிப்பு மிகை ஊதியம் ஒவ்வொரு 4 மாத இடைவெளியில் வழங்கப்படும் தயாரிப்பு மிகைஊதியம், ஊதியம் என்ற வரையறைக்குள் வரும் என்று சொல்லியுள்ளது. மேற்சொன்ன ஹரிஹர் பாலிபைபர் என்ற வழக்கில் இந்த நீதிமன்றம், ஒவ்வொரு இரண்டு மாத இடைவெளியில் கொடுக்கப்படும் வீட்டு வாடகைப்படி இரவு நேர பணிக்கான படி ஊக்கத்தொகை மற்றும் நெருப்பு, ஏரி வாயு மற்றும் தூசி படி அனைத்தும் பணியாளர் அரசு காப்பீட்டு சட்டப்பிரிவு 2(22)-ல் சொல்லப்பட்ட ஊதியம் என்ற வரையறைக்குள் வரும் என்று சொல்லியுள்ளது. இதுவரை போக்குவரத்துப்படியை பொருத்தோ, பயணப்படியை பொருத்தோ எந்தவிதமான தீர்ப்பும் ஏற்படவில்லை.

30) பணியாளர் அரசு காப்பீட்டு நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் சொன்ன தீர்ப்புகளில் எந்தவிதமான குறைபாடும் இல்லை என்றும், பிரிவு 136 இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் எந்தவிதமான குறுக்கீடும் தேவையில்லை. எனவே, இந்த சிறப்பு அனுமதி மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "